அவர் இண்டியாவின்
என் வீடு
டைரக்ஷன்..... நாகையா
சந்திரா பிக்ச்சர்ஸ் ரிலீஸ்
EN VEEDU

நடிக நடிகைகள்

வி. நாகையா	...T. R. ராஜகுமாரி
T. S. பாலையா	...கிரிஜா
ராம சர்மா	...வித்யாவதி
கோபாலகிருஷ்ணன்	...சாயாதேவி
கிருஷ்ணஸ்வாமி	...K. துரைசாமி
	...T. K. கல்யாணம்

மாஸ்டர் சுதாகர், மாஸ்டர் கிருஷ்ணு, லக்ஷ்மி

ஜகந்நாதன்	...நடராஜன்
V. T. கல்யாணம்	...T. A. ராம ராவ்
சிட்டிபாபு	...T. E. கிருஷ்ணமாச்சாரி
	...ராமஸ்வாமி, சம்பத்குமாரி

ஷண்முகம், தேசிகன், குஞ்சிதபாதம், M. V. சர்மா, V. L. சாஸ்திரி, கனகைய செட்டி, நாராயணய்யா, இனகண்டி ராமமூர்த்தி, ஜப்பார், மல்லிகார்ஜுன ராவ்

ராஜேஸ்வரி, பிரபாவதி, லீலாராணி, சரசா, K. லக்ஷ்மி, அன்னபூர்ணு, சாந்தசுந்தரி, சாவித்திரி, கோகிலா, கிருஷ்ணவேணி

முதலியோர்

என் வீடு

கதைச் சுருக்கம்

அவன் வீடு ஒரு பூஞ்சோலை. அதில் அவனை வரவேற்கஎன்றும் மலர்ந்த மனைவியின் முகத் தாமரை உண்டு. முல்லைச் சிரிப்புடன் துள்ளித்துள்ளி விளையாடி, அவன் வாழ்வுத் தென்றலில் நறுமணம் பரப்ப சின்னஞ்சிறு மக்கட் கொடிகள் மூன்று உண்டு. அந்த இன்பப் பூங்காவையும் சூழ்ந்துகொண்டது ஒருபயங்கரச் சூறுவளி. தாமரை வாடியது. இளங்கொடிகள் துவண்டன. தண்ணீர் ஊற்றி வந்தவனை சூறுவளி எங்கோ தூக்கி எறிந்து விட்டதால். எந்த நல்ல மனிதன் வாழ்விலும் இந்தமாதிரி இடைச்சிக்கல்கள் பல உண்டு.

சிவராம் நல்லவன், நாணயஸ்தன். சென்னை சுந்தரம் செட்டியார் பாங்கியில் மானேஜர் வேலை பார்த்து வந்தான். ஆபீஸைத் தவிர அவனுக்குத்தெரிந்த உலகம் அவன் வீடு ஒன்றுதான். உத்தியோகத்திலிருந்து திரும்பும் அவனை அவன் மனைவி சாரதா உவகையுடன் வரவேற்பாள். அவன் குழந்தைகளான கோபி, ஹரி, லக்ஷ்மி மூவரும் அவனைச் சூழ்ந்துகொண்டு கொட்டமடிப்பார்கள். குழந்தைகளோடு குழந்தையாக அவனும் ஆடிப்பாடி விளையாடுவான். இந்த 'நான்கு' குழந்தைகளின் தொல்லை சாரதாவுக்குத் தீராத இன்பம்.

சாரதா கடமையில் கருத்துள்ளவள். அவள் செல்லக் கண்டிப்பினாலும் சிக்கனத்தாலும் குடும்பப் படகு தங்குதடை ஏதுமில்லாமல் சென்றுகொண்டிருந்தது. அந்தப் படகைக் கவிழ்க்க முற்பட்டான் அயோக்யனான தனபால்.

தனபால் சிவராமின் எஜமானனான சுந்தரம் செட்டியாரின் மைத்துனன். தவிர பாங்கியின் உதவி மானேஜர். தான் கெட்டது

மல்லாமல் செட்டியாரின் மகன் குமாரையும் குதிரைப் பந்தயத்துக்கு அழைத்துச்சென்றும், பணம் திருடவைத்தும் பல விதத்தில் கெடுத்து வந்தான்.

சுந்தரம் செட்டியார் மைத்துனன் யோக்கியதையை நன்ருக அறிந்திருந்தார். ஆகவே பம்பாயிலிருந்து ஐந்து லக்ஷ ரூபாய்க்குத் தங்கம் வாங்கி வரும் முக்கிய வேலைக்கும் மானேஜர் சிவராமையே அனுப்புகிருர். அந்தத் தங்கத்தைத் திருடிவிட தனபால் தன் ஆசை நாயகி லீலாவை, சிவராம் பிரயாணம் செய்த அதே வண்டியில் அனுப்புகிருன்.

லீலா ஒரு வேசி. பிலிம் கம்பெனி ஆரம்பித்து அவளை படங்களில் கதாநாயகி ஆக்குவதாக ஆசைகாட்டிய தனபாலின் கைப் பொம்மையாக இருந்தாள். ஆகவே சிவராமை மோசம் செய்ய தன் வேலைக்காரன் உமாபதியுடன் பம்பாய் மெயிலில் பிரயாணமாகிருள்.

உமாபதி நொண்டியானுலும் கைகாரன். தனபால் யோசனைப்படி சிவராம் பிரயாணம் செய்த கம்பார்ட்மெண்டிலேயே லீலாவை ஏற்றுகிருன். ரயிலில் லீலா தன் சாகசத்தால் சிவராமை மெள்ள கைக்குள்போட்டுக்கொண்டு பம்பாயில் அவன் இறங்கிய ஹோட்டலிலேயே தங்குகிருள். சிவராமை உமாபதியும் தனபாலின் நண்பனுன ஹரீஷூம் கண்காணித்து வருகிருர்கள். சிவராம் தங்கம் வாங்கியதும் லீலா ஹரீஷ் வீட்டுக்கு அழைத்துச்சென்று நாட்டியம் காட்டுகிருள்.

ஹரீஷ் மிகக் கொடியவன். தனபாலின் நண்பன். தங்கத்தைத்தட்டிவிட அவனும் ஒத்துழைக்கிருன். தங்கம் வாங்கிய இரவில் சிவராமுடன் ஹோட்டலில் தனிமையில் இருக்கையில் லீலா சிவராமை மயக்கி அவனிடமிருந்த தங்கத்தைத் திருடிவிடுகிருள். மறுநாட் காலையில் எழுந்திருந்த சிவராம் தங்கத்தைக் காணுது ஹரீஷ் வீட்டுக்கு ஓடி லீலாவைக் கண்டுபிடித்துத் தங்கத்தைக்கொடுத்துவிடும்படி கெஞ்சுகிருன். சதிகாரர்கள் அவனை மண்டையிலடித்து மயக்கமடையச் செய்கிருர்கள். மயக்கமாயிருந்த சிவராமை ரயில் தண்டவாளத்தில் போட்டு வரும்படி தன் நண்பனுன ஜூடுப் சிங்கை ஹரீஷ் ஏவுகிருன்.

ஜூடுப் சிங் சிவராமை ரயில் தண்டவாளத்தில் போட்ட பிறகு, அவன் பையிலிருந்த தங்கக் கெடியாரத்தையும் பர்ஸையும் எடுத்துக்கொண்டு புறப்பட எத்தனிக்கையில் சிவராம் மூர்ச்சை

தெளிந்து எழுந்து சண்டை போடுகிறான். சண்டையில் சிவராம் அடிபட்டு பக்க வாட்டிலிருந்த சரிவில் உருண்டோடி நினைவை இழக்கிறான். வேகமாக வந்துகொண்டிருந்த ரயில் ஜூடுப் சிங்கின்மேல் ஏறிவிடுகிறது. ஜூடுப்பின் பையிலிருந்த கடிகாரத்தி லிருந்தும் கடிதங்களிலிருந்தும் இறந்தவன் சிவராமேயென்று உல கம் நம்புகிறது. பைத்தியம் பிடித்ததுபோல் ரயிலில் வந்துகொண் டிருந்த சிவராம் தான் இறந்த செய்தியைப் படிக்கிறான். தான் கௌரவஸ்தனென்றும் தங்கத்துக்காக உயிர் விட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருப்பதைப் படித்தபின் சொந்த ஊர் திரும்பினால் தன் மீதுள்ள மதிப்பும் குடும்பக் கௌரவமும் போய் விடுமேயென்று மயங்கி மயங்கி தீவிர யோசனை செய்கிறான். முடிவில் குடும்ப கௌரவம் நிலைக்க தான் மறைந்து வாழத் தீர்மானிக்கிறான். எங்கெங்கோ அலைந்து திருச்சிவந்து முனிசிபல் தோட்டியாயிருக் கிறான். பன்னிரண்டு வருஷங்கள் பறந்தோடுகின்றன. அந்தப் பன்னிரண்டு வருஷ வாழ்வில் அவன் குடும்பத்துக்குப் பல அல்லல்கள். வீட்டின் பேரிலிருந்த கடனால் வீடு ஏலம் போயிற்று. சோற்றுக்குக்கூட கஷ்டப்பட்டார்கள். சாரதாவின் விடாமுயற்சி யால் குழந்தைகள் முன்னுக்கு வருகிறார்கள். சொந்த வீட்டை யும் தனபாலிடமிருந்து திரும்பி வாங்குகிறார்கள். லக்ஷ்மியைக் கற்பழிக்கத் திட்டம் போட்ட தனபால் வீட்டை முதலில் விட்டுக் கொடுக்கிறான்.

லக்ஷ்மி, கோபி, ஹரி மூவரும் சங்கீதத்தில் பிரபலப்பட்டு திருச்சி வந்தபோது, அவர்கள் கச்சேரியை சிவராம் கேட்டு பூரிப்படைகிறான். அவர்களை நெருங்க கொடுத்து வைக் காததால் விக்கி விக்கி அழுகிறான். கச்சேரியின் இறுதியில் சாரதா நோயுற்றிருப்பதாக அறிந்து அவளைப் பார்க்க சென்னை வருகிறான். அவன் வந்த அன்று லக்ஷ்மியின் பிறந்த நாள். உள்ளே நடந்துகொண்டிருந்த மகளின் பிறந்த நாள் கொண்டாட் டத்தை ஜன்னலால் எட்டிப்பார்த்து மகிழ்ந்த சிவராமை போலீஸ் காரன் திருடனென்று பிடித்துக்கொள்ளுகிறான்.

பிறகு சிவராமனின் கதி என்னவாயிற்று? தான் யார் என்பதை உலகத்துக்கு அறிவித்தானா? தங்கத் திருட்டின் உண்மை வெளி வந்ததா இல்லையா? லக்ஷ்மிமீது தனபால் வீசிய வலையின் விளைவு என்ன? லீலா என்ன ஆனாள்? இந்தக் கேள்வி களுக்குப் பதிலை வெள்ளித் திரையில் பாருங்கள்.

—

என் வீடு

பாட்டுகள்

---

1 **சிவராம், குழந்தைகள்**

பொன்விளையும் தெய்வீகப் பாரத நாடெந்நாளும்
புகழுடனே வாழஅருள் நாராயணா...சூர்ய நாராயணா
பச்சைப் பயிர்களாய்ப் பாரெங்கும் ஓங்கிவளர
பாலாருய்ப் பெருகவருள் நாராயணா (புகழுடனே)
அழகாய்க் குழந்தைகள் பாடிக்கொண்டாடியே
மகிழ்வோடு வளரவும் நிறைசெல்வம் பொங்கவும்
நாராயணா (புகழுடனே)
இல்லங்கள் தொறும் மங்கள தீபங்கள் ஒளிவீச
எல்லோரும் ஆனந்தவுள்ளமுடன்—பல்லாண்டு
(புகழுடனே)

பாபநாசம் சிவன்

2 **சிவராம், சாரதா, குழந்தைகள்**

பணிந்தேன் தாயே—பணிந்தேன் தந்தையே
தாள் பணிந்தேன் சத்குருவே—சரணடைந்தேன்
குலதெய்வமே
ஜயக்ருஷ்ண க்ருஷ்ண கோவிந்த ஹரே
ஜயராம க்ருஷ்ண கோபால ஹரே
திருநாம குணமுத பானமே
பேரின்பமதாம் ஜயக்ருஷ்ண ஹரே
உன்திரு வருளல்லது புவிமீது
என்வரதனே வேறு துணையேது

ஆனந்தமூர்த்தி ஜயக்ருஷ்ண ஹரே
பாலா கோபாலா அனந்தா தயாளா
லீலாவதாரா வந்தாள் நந்த பாலா
ஆனந்த மூர்த்தி ஜயக்ருஷ்ண ஹரே

பாபநாசம் சிவன்

3 லக்ஷ்மி, கோபி, ஹரி

கொஞ்சு மொழிமைந்தர்களே தவளவானில்
தவழ் நிலவின் ஒளியிலோடி ஆடுவீரே
ஜில்லெனவே மெல்ல மெல்ல
வந்துலாவு தென்றல் தன்னை பாடுவீரே
இன்பமான திவ்வுலகம் அன்புள்ளம் கலந்திடிலே
பூங்காவாம் உந்தன் மனம்
உள்ளன்பே தெய்வமணம்
இவ்வுண்மை நீ மறவேல்
பூலோகம் தனில்நீயே
ஸ்வர்க்கபோகம் அடைவாயே
புண்ணியத்தில் மானிடப்
பிறப்படைந்த தெண்ணுவையே
நெறி தவறி நீ வீழ்ந்தால்
பாழடைந்ததுன் வாழ்நாள்
கை தவறிய கண்ணாடி
தூள்போலாம் பயனில்லை வாடி
கொடிய பாதை நடவாதே
மனவமைதி கிடையாதே
இருள் சூழ்ந்திடும் வாழ்வு
அன்பிலார்க்கு இன்பமில்லை
இவ்வுண்மை நீ மறவேல்

பாபநாசம் சிவன்

4 ரேடியோ

என்னென்ன ஆசை காட்டினுயோ
ஏதேது கதை யளந்தாயோ
மாந்தளிர் தவழும் மஞ்சத்தின்மேலே
மருவிடுங் காதலி மையலினுலே
தாபம் மீறிடக் கூவுங்குயிலே (என்)

'சுரபி'

5 லீலா டான்ஸ் (ஹிந்தி)

ஹா......ஹா......ஹா......ஹா
மை ஹஸ்தி காதி ஆயீ
மஸ்த் ஜவானி ஆயீ ஆயீ
மஸ்த் ஜவானீ ஆயீ
ஆங்க் ரஸீலி அவுர் நகீலி
நஸர் நகேலி அவுர் ஷர்மீலி
பல்குன் கோட் சிபாயி
அர்மானேங்கி தார் மிலாதி
ஜீவன் ஸர்கம் காதீ ஹைம்
தில்கா ஸாரா தர்த் மிடாதீ
தில்கா ஸப்துக் தர்த் மிடாதீ
அப்ஞு-ராக் ஸுஞதி ஹைம் (மைஹஸ்தி)
சல்தீ ஸாங்ஸே ப்ரேம் திவானி
ஆஷாவோங்கி மேரீ கஹானி
லாக்மர்ஜ்கீ...ஏக் தவாயீ
மஸ்த் ஹுஸன்கி ஏக் அங்க் டாயி (மைஹஸ்தி)

(மோஹன்)

6 கோரஸ்

பொங்கும் மங்களமெங்கும் தங்குக
பொங்கலோ பொங்கல்

புது நவரத்ந பரணமு மாடையும்
பொங்கலோ பொங்கல்
வீதிகளெங்கும் விதம் விதமாய் இளங்
கன்னியர் கோலமிட
வெண்ணிலவில் இளங்காதலர் அன்பு
குலாவி மகிழ்ந்துலவ
மங்கையர் செங்கை வளைகள் குலுங்கவும்
கும்மியடித்தாட
தங்க நிறத்துடனே நவதானியப்
பைங்கதிர் விளையாட
முக்கனி ரஸமும் கலந்த சர்க்கரைப்
பொங்கலோ பொங்கல்
முழுது நிறைந்த கறந்த பசும்பால்
பொங்கலோ பொங்கல்
மங்கள மஞ்சள் குங்குமமணியும்
மங்கையர் கைகள்
மங்கள தீபாலங்க்ருத மனைகளும்
பொங்கலோ பொங்கல்

பாபநாசம் சிவன்

7 லவ—குச (நாடகம் பாட்டு)

பூமியிலே ஒரு புண்ய கதை
புனித ராம கதை கேளீரோ
ஜகம் புகழும் நாமகதை கேளீரோ
ஜனகாதி முனிவர் மனதார வாழ்த்த
சிவதனுவை வளைத்து திருமகளை அணைத்த
தாசரதி காதல் கேளீரோ
ஸ்ரீதாசரதி காதல் கேளீரோ
பூமியிலே ஒரு புண்ய கதை

அன்னை என்ற சக்தி அன்பால்—
அருளால்—அணைப்பால்—அகிலமாளும்
அண்டகோடி ஓர் குடும்பம்
அகிலமென்ற மனையிலே
ஒண்டி வாழும் அண்டமேழும்
ஒடுங்கும் சக்தி மடியிலே
ஊரு ஏது—பேரு ஏது—
உறவு ஏது—பிரிவு ஏது (எந்த)

'சுரபி'

10 சாரதா

நிலையில்லா வாழ்வு இதுதானா
நேற்றிருந்த தெல்லாம் கனவுதானா
தாங்கிய நாதன் பொய்தானா—எங்கள்
தான தருமமும் பொய்தானா
ஏங்கிடும் பாலரை எண்ணியே நான்—கை
ஏந்தி அலைவதும் மெய்தானா
உண்டான போது வந்து உறவாடி
உயிரிலும் பங்கு கொண்டாடி
திண்டாடும் வேளையில் நகையாடும்
சண்டாள உலகம் இதுதானா
இதுதானா எல்லாம் கனவுதானா

'சுரபி'

11 பிச்சைக்காரன்

காலமாம் வெள்ளமதிலே ஞாலந்தான் சுழன்றிடுமே
காலமாம் வெள்ளமதிலே ஞாலந்தான் சுழன்றிடுமே
(காலமாம்)

கடலும் மலையாய் மாறிடுமே
கண்ணீர் பன்னீர் ஆயிடுமே

ஆருத் துயரமேனும் மனம் நீராய் உருகலாமே
இரவும் பகலும் சாச்வதமோ
உன் ஏக்கமிதுதான் நிரந்தரமோ
ஜோதி உதிக்குது பாராய்
கீர்த்தி வளர்த்திட வாராய்

'சுரபி'

12

கோரஸ்: பூரண சந்திரன் சிரிக்குது பார்
பூமியிலே இருள் பறக்குது பார்
மரமும் செடியும் ஆடுது பார்
'வா வா' என்றே அழைக்குது பார்

பெண்: வாராய் எந்தன் சந்திரன் நீ வாராய்
கானகந்தனில் அலைந்தாயோ
கண் சிமிட்டிடும் தாரை மேல்
காதலாகியே நீ திரிந்தையோ

கோரஸ்: அம்புலி மாமா வாராயோ
அன்பாய் எங்களை பாராயோ

ஆண்: மாசில் மூழ்கி மறைந்தேனே
ஆசை பாசமும் மறந்தேனே

பெண்: பேதை என்னை நீ மறந்தாலும்
பிள்ளை குட்டியை மறப்பாயோ—மாமா

கோரஸ்: எங்கள் ஊரில் நில்லாயோ
இன்பக் கதைகள் சொல்லாயோ

பெண்: போன நாள்களை மறப்போமே
புதிய வாழ்வை நினைப்போமே

வீடு விளங்கிட விளக்கேற்றி
மேன்மையாகவே வாழ்வோமே

கோரஸ்: ஆணும் பெண்ணும் களிப்போமே
அமுத நிலவிலே குளிப்போமே

'சுரபி'

13 கோரஸ்

கண்மணியே கண்மணியே
கலிதீர்த்த கருமணியே
எங்கள் கலிதீர்த்த கருமணியே
விண்மணியே விண்மணியே

விலைமதியாக் குலமணியே
வாடாத வான்மலரே
குறையாத நிறைமதியே
தெவிட்டாத தெள்ளமுதே

ஓங்கும் வேங்கட மாமலைபோல்
ஒளியில் விளையும் வளர்பிறையின் கலைகள்போல்
தாங்கும் தேவி தன்னருளால்
குணந்தழைப்பாய் இன்பமணந் தழைப்பாய்

எங்கள் குலவிளக்காவாய்
அன்பினில் விளையும் ஆரமுதாய்
அலைகடல் வளரும் அருமருந்தாய்
ஆண்டு பல்லாண்டு வாழ்ந்திடுவாய்

பாபநாசம் சிவன்

HEAR THE SONGS ON H. M. V & COLUMBIA RECORDS

படச் சிற்பிகள்

திரைக்கதை, டைர்க்ஷன் :	வி. நாகையா
வசனம் :	'சாண்டில்யன்'
பாட்டுகள் :	பாபநாசம் சிவன் & 'சுரபி'
ஒளிப்பதிவு டைரக்டர் :	M. A. ரஹ்மான்
ஒலிப்பதிவு டைரக்டர் :	A. கிருஷ்ணன் B. A. (வாஹினி)
	சீனிவாஸராகவன் (ரேவதி)
ரிகார்டிங் :	K. விஸ்வநாத் (வாஹினி)
	கண்ணன் (ரேவதி)
ஆர்ட் டைரக்ஷன் :	C. ராமராஜு
	J. S. அந்தோனி
சங்கீத அமைப்பு :	வி. நாகையா
	A. ராம ராவ்
டான்ஸ் டைரக்டர் :	வேம்படி சத்யம்
மேக்-அப் :	ஹரிபாதசந்தர்
	துரைசுவாமி
	பீதாம்பரம்
	கோபால் ராவ்
எடிடிங் :	S. சூர்யா
ஆபரேடிவ் கேமிராமேன் :	K. S. பிரஸாத்
புரோஸஸிங் :	S.V.வெங்கடராமன் B.SC., (விஜயா ஸினி லேபரடரி)
டான்ஸ் :	கோபிநாத் & காந்தா
ஹிந்தி பாட்டுகள் :	J.S. காஷியப் & மோஹன்

உதவி

திரைக் கதை, டைரக்ஷன் :	A. S. திருமலை & I. N. மூர்த்தி
ஒளிப்பதிவு :	M. R. ராஜு, மல்லி இராணி (வாஹினி) கான், பாலு (ரேவதி)
ஒலிப்பதிவு :	T. A. ஜகந்நாத் W. நரசிம்மமூர்த்தி J. V. ராகவேந்திர ராவ்
சங்கீதம் :	S. B. தினகர் ராவ் பிரபல சுப்பாராவ்
எடிடிங் :	A. S. தங்கவேலு R. ஸ்ரீராம், M. S. ராஜன்
மேக் அப் :	M. ராகவையா B. V. ராகவன்
பின்னணி சங்கீதம் :	M. L. வசந்தகுமாரி R. பாலசரஸ்வதி P. G. கிருஷ்ணவேணி (ஜிக்கி) கானசரஸ்வதி, லலிதா, ரத்னம் சுந்தரம்மா, சத்யவதி, மோதி, V.J.வர்மா, மாதவபெத்தி சத்யம்
ஹிந்தி பாட்டுகள் :	மீனு கபூர் (பம்பாய்)
புரொடக்ஷன் நிர்வாகி :	R. கிருஷ்ணமூர்த்தி
புரொடக்ஷன் மேனேஜர்கள் :	J. சேஷகிரி ராவ், G.V.S ராஜு
கண்டின்யுடி அஸிஸ்டெண்டுகள் :	T. V. ராமமூர்த்தி, பார்வதம்மா
ஆடை அலங்காரம் :	Y. சீனிவாசலு
ஸ்டில்ஸ்:	R. நாகராஜ ராவ், K. ராமதாஸ்
அரங்க நிர்மாணம் :	C. குப்புசாமி, K. சீனிவாஸன்
வர்ண வேலை :	R. முத்து, K. S. N. மூர்த்தி
மோல்டிங் :	வேலுசாமி
ஸ்டுடியோ :	வாஹினி, ரேவதி
பொது மேற்பார்வை :	T. V. ரங்கா ராவ்

தயாரிப்பாளர்கள்:

அவர் இண்டியா பிலிம்ஸ், சென்னை 17.

தியோடர் பிரஸ், திருச்சி.